பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி-சென்னை-4
22 09 2025 MONDAY 7.15 AM
ஆகாஷ்வாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

- பிரதமர் திரு நரேந்திர மோடி, அருணாச்சலப்பிரதேசத்தில் சுமார் ஐந்தாயிரத்து 100 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை இன்று தொடங்கிவைக்கிறார்.

- சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்தங்கள் இன்று நாடு முழுவதும் அமலுக்கு வந்துள்ளதையடுத்து பல்வேறு தரப்பினர் வரவேற்பு தெரிவித்துள்ளனர்.

- ஆரோக்கியமான மகளிர் வலிமையான குடும்பம் இயக்கத்தின் மூலம், நாடு முழுவதும் 76 லட்சத்திற்கும் மேற்பட்டோர் பயனடைந்துள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

- பாலஸ்தீன நாட்டை முறைப்படி அங்கீகரிப்பதாக, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா மற்றும் கனடா நாடுகள் அறிவித்துள்ளன.

- குருகிராம் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் *Zeel Desai* பட்டம் வென்றார்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<<<>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி, அருணாச்சலப்பிரதேசத்தில் சுமார் ஐந்தாயிரத்து 100 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை இன்று தொடங்கிவைக்கிறார்.

அம்மாநிலத் தலைநகர் இட்டா நகரில் நடைபெறும் நிகழ்ச்சியில், 3 ஆயிரத்து 700 கோடி ரூபாய் மதிப்பிலான இரண்டு நீர்மின் திட்டங்களுக்கு பிரதமர் அடிக்கல் நாட்டுகிறார்.

தவாங் பகுதியில் அதிநவீன மாநாட்டு மண்டபத்துக்கு அடிக்கல் நாட்டும் அவர், சாலை கட்டமைப்பு உள்ளிட்ட முடிவடைந்த திட்டப்பணிகளையும் தொடங்கிவைக்கிறார்.

பின்னர், அங்கு நடைபெறும் பொதுக்கூட்டத்திலும் அவர் உரையாற்றுகிறார்.

இதனைத்தொடர்ந்து, திரிபுரா செல்லும் பிரதமர், *Matabari* பகுதியில் மாதா திரிபுர சுந்தரி கோவில் வளாக மேம்பாட்டுப் பணிகளையும் தொடங்கிவைக்கிறார்.

<<<<<<>>>>>

சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்தங்கள் இன்று நாடு முழுவதும் அமலுக்கு வந்துள்ளதையடுத்து பல்வேறு தரப்பினர் வரவேற்பு தெரிவித்துள்ளனர்.

*சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்தங்கள் தொடர்பாக பிரதமர் திரு நரேந்திர மோடி நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரை குறித்து இந்திய தொழில் கூட்டமைப்பின் தலைவர் திரு Rajiv Memani வெளியிட்டுள்ள அறிக்கையில், உள்நாட்டு உற்பத்திப் பொருட்களின் பயன்பாட்டை அதிகரிக்க வேண்டும் என்ற பிரதமரின் வேண்டுகோள், சுதேசி இயக்கத்திற்கு வலுசேர்க்கும் என்று கூறியுள்ளார்.*

*இந்த சீர்திருத்தங்கள் நாட்டின் வளர்ச்சிக்கு மேலும் உத்வேகம் அளிக்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.*

*வரி குறைப்பு அறிவிப்புகள் சரக்கு மற்றும் சேவை வரி சேமிப்பு திருவிழாவாக கொண்டாடப்படும் என்ற பிரதமரின் அறிவிப்பையும் திரு Rajiv Memani வரவேற்றுள்ளார்.*

*இதனிடையே, தமிழகத்தின் விழுப்புரம் மாவட்டத்தை சேர்ந்த விவசாயிகள் மற்றும் கட்டுமானத் தொழிலாளர்கள், சரக்கு மற்றும் சேவை வரி குறைப்புக்கு வரவேற்பு தெரிவித்துள்ளனர்.*

*(Voice Byte – இரண்டு பயனாளிகள் – 38 Sec. )*

<<<<<<>>>>>

*ஆரோக்கியமான மகளிர் வலிமையான குடும்பம் இயக்கத்தின் மூலம், நாடு முழுவதும் சுமார் 76 லட்சத்திற்கும் மேற்பட்டோர் மேற்பட்டோர் பயனடைந்துள்ளதாக மத்திய சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.*

*கடந்த 17-ம் தேதி தொடங்கிய இந்த இயக்கத்தின்கீழ், கடந்த நான்கு நாட்களில் மகளிர் நலனுக்காக 2 லட்சத்து 83 ஆயிரம் சுகாதார முகாம்கள் நடத்தப்பட்டுள்ளதாக அந்த அமைச்சகம் கூறியுள்ளது.*

*இந்த சுகாதார முகாம்களின் மூலம், பெண்கள் மற்றும், குழந்தைகளுக்கு, விரிவான மருத்துவ சேவைகள் வழங்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

<<<<<<>>>>>

*இந்தியா – அமெரிக்கா இடையிலான வர்த்தக ஒப்பந்தம் குறித்து பேச்சுவார்த்தை நடத்துவதற்காக மத்திய வர்த்தகத்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் இன்று அமெரிக்கா செல்கிறார்.*

*அமெரிக்க அரசின் உயரதிகாரிகள் கடந்த 16-ஆம் தேதி புதுதில்லியில் நடத்திய பேச்சுவார்த்தைகள் ஆக்கப்பூர்வமாக அமைந்ததையடுத்து, அடுத்தக்கட்ட நடவடிக்கை குறித்து*

*திரு பியூஷ் கோயல் அமெரிக்க அமைச்சருடன் பேச்சுவார்த்தை நடத்த உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*இருநாடுகளுக்கும் பயனளிக்கும் வகையில், பேச்சுவார்த்தைகளை விரைவில் முடிவுக்கு கொண்டுவருவது குறித்து இந்த சந்திப்பின்போது விவாதிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*<<<<<<>>>>>>*

*2036-ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகளை இந்தியாவில் நடத்துவது சர்வதேச அரங்கில் இந்தியாவின் வலிமையை எடுத்துக்காட்டுவதாக அமையும் என்று மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.*

*தமிழகத்தின் கோவை மாவட்டத்தில் உள்ள ஈஷா யோகா மையத்தில் நடைபெற்ற கிராமப்புற விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்கி அவர் பேசினார்.*

*ஒலிம்பிக் போட்டிகளை நடத்துவது வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவது என்ற இலக்கை அடைவதில் முக்கிய மைல் கல்லாக அமையும் என்றும் அவர் குறிப்பிட்டார்.*

*ஒழுக்கம், ஒற்றுமை மற்றும் கூட்டாக செயல்படுவதன் முக்கியத்துவத்தை விளையாட்டுப் போட்டிகள் உணர்த்துவதாகவும் திரு மன்சுக் மாண்டவியா தெரிவித்தார்.*

*<<<<<<>>>>>>*

*பாலஸ்தீன நாட்டை முறைப்படி அங்கீகரிப்பதாக, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா மற்றும் கனடா நாடுகள் அறிவித்துள்ளன.*

*காஸா நகரைக் கைப்பற்ற இஸ்ரேல் கடும் தாக்குதல் நடத்திவரும் நிலையில், பாலஸ்தீன தனி நாட்டை, பெல்ஜியம் உள்ளிட்ட நாடுகள் ஏற்கனவே அங்கீகரித்துள்ளன.*

*இந்நிலையில், இங்கிலாந்து பிரதமர் திரு. Keir Starmer வெளியிட்டுள்ள காணொலி பதிவில், பாலஸ்தீனத்தை அங்கீகரிப்பது, அமைதிக்கான நம்பிக்கைக்கு புத்துயிரூட்டுவதாக அமையும் என்று கூறியுள்ளார்.*

*இதேபோன்று, ஜி-7 நாடுகளில் முதலாவதாக, கனடாவும், பாலஸ்தீனத்தை அங்கீகரிப்பதாக தெரிவித்துள்ள அந்நாட்டு பிரதமர் திரு.Mark Carney, பாலஸ்தீனம் மற்றும் இஸ்ரேல் ஆகிய இரு நாடுகளிலும் அமைதியை ஏற்படுத்த கனடா ஒத்துழைப்பு அளிக்கும் என்று குறிப்பிட்டுள்ளார்.*

இதேபோன்று, ஆஸ்திரேலிய பிரதமர் திரு.*Anthony Albanese*-ம், சுதந்திரமான, இறையான்மையுடைய தனி நாடாக பாலஸ்தீனத்தை அங்கீகரிப்பதாக தெரிவித்துள்ளார்.

இந்த மூன்று நாடுகளின் முடிவை பாலஸ்தீன வெளியுறவுத்துறை வரவேற்றுள்ள நிலையில், இஸ்ரேல் அதனை குறை கூறியுள்ளது.

<<<<<<>>>>>>

ஐரோப்பிய நாடுகளின் விமான நிலையங்களில் நடத்தப்பட்ட இணையத் தாக்குதலால், இந்திய விமான நிலையங்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படவில்லை என்று, மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் தெரிவித்துள்ளது.

ஐரோப்பிய விமான நிலையங்களில் பயன்படுத்தப்படும் *Collins Aerospace* நிறுவனத்தின் *MUSE* மென்பொருள் தில்லி விமான நிலையத்திலும் பயன்படுத்தப்படும் போதிலும், விமான இயக்கத்தில் எந்த பாதிப்பும் இல்லை என்று அந்த அமைச்சகம் கூறியுள்ளது.

லண்டன், ப்ரஸ்ஸல்ஸ் உள்ளிட்ட விமான நிலையங்களில் இணையத் தாக்குதல் நடத்தப்பட்டது குறித்த தகவல் கிடைத்த உடனேயே, இந்திய விமான நிலையங்களில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டதாகவும், தொடர்ந்து விழிப்புடன் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இணைய தாக்குதல் காரணமாக, ஐரோப்பிய விமான நிலையங்களில், பயணிகள் மற்றும் அவர்களது உடைமைகள் பரிசோதனை பாதிக்கப்பட்டதுடன், விமானத்தில் பயணம் செய்ய அனுமதிப்பதற்கான *Boarding Pass*-களும் கையால் எழுதிக் கொடுக்கப்பட்டது.

<<<<<<>>>>>>

உற்பத்திப்பொருள் சார்ந்த, அட்டவணையிடப்பட்ட சரக்கு ரயில் சேவைகளை அறிமுகப்படுத்தியுள்ளதன் மூலம், சரக்குப் போக்குவரத்து சேவை மேம்படுத்தப்பட்டுள்ளதாக ரயில்வே தெரிவித்துள்ளது.

உணவு தானியங்களுக்கான சரக்கு ரயில் சேவை பஞ்சாபின் லூதியானாவிலிருந்து உத்தரப்பிரதேசத்தின் வாரணாசிக்கும், வாகனங்களுக்கான சரக்கு ரயில் சேவை பரூக் நகரிலிருந்து லக்னோவுக்கும் இயக்கப்படுகிறது.

இதேபோன்று, *Garhi*-யிலிருந்து முந்த்ரா துறைமுகத்திற்கு சரக்குப் பெட்டகங்களை எடுத்துச் செல்ல *Niryaat* மற்றும் ரூப் நகரிலிருந்து அனந்த்நாக்-கிற்கு சிமென்ட் கார்கோ சேவையும் இயக்கப்படுகிறது.

குறித்த நேரத்தில் சரக்குகளை எடுத்துச் செல்வதன் மூலம், சரக்குகளை அனுப்புவோர் மற்றும் அவற்றைப் பெற்றுக் கொள்வோரிடையே நம்பிக்கை அதிகரித்துள்ளதாகவும், நுகர்வோரும் மனநிறைவு பெற வழிவகை ஏற்பட்டிருப்பதாகவும் ரயில்வே தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>

## விளையாட்டுச் செய்திகள்

குருகிராம் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் *Zeel Desai* பட்டம் வென்றார்.

ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் அவர் 2-6, 6-1, 6-4 என்ற செட் கணக்கில், *Shruti Ahlawat*-ஐ வென்றார்.

இரட்டையர் பிரிவில் *Shiwani – Pranjala* இணையும் பட்டம் வென்றது.

<<<<<<>>>>>

ஜார்ஜியாவின் *Batumi* -ல் நடைபெற்ற சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியா 4 தங்கம், 3 வெள்ளிப்பதக்கங்களை வென்றது.

இப்போட்டியின், மகளிர் ஒற்றையர் 19 வயதுக்கு உட்பட்டோருக்கான பிரிவில் *Shriya* -வும், 17 மற்றும் 15 வயதுக்கு உட்பட்டோருக்கான பிரிவில் *Ankolika*-வும், 13 வயதுக்கு உட்பட்டோருக்கான பிரிவில் *Kaviya*-வும் தங்கப்பதக்கம் வென்றனர்.

17 மற்றும் 15 வயதுக்கு உட்பட்டோருக்கான பிரிவில் *Tushti*-யும், 19 வயதுக்கு உட்பட்டோருக்கான கலப்பு இரட்டையர் பிரிவில் *Rohan – Prisha* இணையும் வெள்ளிப்பதக்கம் வென்றது.

<<<<<<>>>>>

ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டியில் இந்தியா 6 விக்கெட் வித்தியாசத்தில் பாகிஸ்தானை வென்றது.

துபாயில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில் டாஸ் வென்ற இந்தியா முதலில் பந்துவீச தீர்மானித்ததையடுத்து பேட் செய்த பாகிஸ்தான் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் ஐந்து விக்கெட் இழப்பிற்கு 171 ரன் எடுத்தது.

172 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய இந்தியா, 18 புள்ளி ஐந்து ஓவரில் 4 விக்கெட் இழப்பிற்கு 174 ரன் எடுத்து வெற்றிபெற்றது.

39 பந்துகளில் 74 ரன் குவித்த அபிஷேக் சர்மா, ஆட்ட நாயகனாக தேர்வு செய்யப்பட்டார்.